1994 மார்ச் 28]

அங்கே இருக்கிற மக்களுக்குத் தேவையான வசதிகள் குறிப்பாக குடிநீர் வசதி, மின்சார வசதி, சுகாதார வசதி போன்றவைகளைச் செய்ய முடியாத நிலைமையிலே பொருளாதாரத்திலே பின்தங்கிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. திங்கள்நகர் பேரூராட்சி ஒரு தேர்வுநிலைப் பேரூராட்சி. அந்தப் பேரூராட்சி அதிக வருவாய் உள்ள பேரூராட்சி அந்தப் பேரூராட்சியோடு தொட்ட பகுதிதான் தலக்குளம் ஊராட்சி. எனவே அந்த ஊராட்சியை திங்கள்நகர் பேரூராட்சியோடு சேர்த்தால் தலக்குளம் ஊராட்சியிலே வாழ்கிற மக்களுக்கு எல்லாவிதமான அடிப்படை வசதிகளையும் செய்துகொடுக்க முடியும். ஆகவே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தலக்குளம் ஊராட்சியை திங்கள் நகர் பேரூராட்சியோடு இணைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில்தான் இந்த தலக்குளம் ஊராட்சியை திங்கள்நகர் பேரூராட்சியோடு இணைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வந்தது. ஆனால் இடையிலே நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்குத் தெரிவித்த பதிலிலேகூட தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் காரணமாகத்தான் தற்போது இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தலக்குளம் ஊராட்சியைப் பொறுத்தவரை, அங்கேயிருக்கின்ற பிரச்சினை, அடிப்படைப் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், அரசு நிச்சயமாக அதிலே தலையிட்டு அந்த மக்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளைப் பெறுவதிலே ஆர்வம் மேற்கொள்ளும், அதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 119, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

119-

ஆதிதிராவிட விடுதி மாணவ, மாணவிகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தல்.

**22353—டாக்டர் வெ. சரோஜா :*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 மார்ச் 28

(அ) தமிழகத்தின் அனைத்து ஆதிதிராவிடர் விடுதி மாணவ, மாணவிகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1993-94 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு ஆணை ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

(ஆ) 1993-94 ஆம் கல்வி ஆண்டிலும் இதனைச் செயல்படுத்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆப்ஷனாக அருகில் உள்ள மருத்துவமனையில் பணி புரியும் மருத்துவர்களைக் கொண்டு மருத்துவப் பரிசோதனைகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. 5 வயது முதல் 15 வயது வரை உள்ள மாணவ சமுதாயத்திற்கு மகத்தான ஒரு சிறப்பு மருத்துவ முகாமை நடத்த இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் பெயரைத் தாங்கியுள்ள அந்த மருத்துவ முகாமில் சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிடர் விடுதியில் தங்கி கல்வி பயிலும் அந்த மாணவர்களுக்கு சிறப்புத் திட்டமாக இதைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறையில் மாணவ மாணவியர் விடுதிகளில் இருக்கிறவர்களுக்கு அருகாமையில் இருக்கின்ற மருத்துவமனையில் இருக்கின்ற மருத்துவர்கள் மாதம் ஒரு முறை சென்று பார்வையிட்டு அந்த மாணவர்களைப் பரிசோதனை செய்கிறார்கள். அவர்களுக்கு என்று கௌரவ ஊதியம் மாதம் 100 ரூபாய் வீதம் இந்த அரசாங்கம் அளித்துவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 120, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

120-

பிற்பட்டோர் நலவிடுதியிலுள்ள மாணவர்களுக்கு அரசு செலவிடும் தொகையை உயர்த்துதல்.

*24630—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—